## இலங்கை பொறியியற் பேரவை – 2023

---

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பொறியியற் பேரவையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, பேரவையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பேரவையின் தொடர்ந்தியங்குதல் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பதுபற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு பொருட்டு பேரவையின் தொடர்ந்தியங்குதல் தொடர்பிலான அடிப்படையை பயன்படுத்தும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களிலுள்ள அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாவிடின் எனது அபிப்பிராயத்தை திரிபுபடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள்

பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் பேரவையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பேரவையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பேரவை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுக் கணக்கீட்டு நியமம் 11இன் பிற்சேர்க்கைக்கு முரணாக, கடந்த வருடங்களில் திறைசேரி அளிப்புகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு காலக்கழிவு செய்யப்பட்டு எஞ்சிய ரூபா 523,355 தொகை பிற்போட்ட வருமானமாகக் காட்டப்பட்டிருந்ததுடன், முந்திய வருட வருமானமொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பொதுக் கணக்கீட்டு நியமங்களின்படி உரிய கணக்குப்பதிவு மேற்கொள்ளப்படவில்லை, எனினும் இலாபநட்ட கூற்றின் இறுதி பெறுபேறுக்கு எவ்வித தாக்கமும் இல்லை. இது வெறுமனே நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் வழுவொன்றாக இனங்காணப்படலாம். மேலும் உரிய மீதியின் தற்போதைய பெறுமதி ரூபா 523,355 ஆவதுடன், இந்த மீதி 2024 இல் முழுமையாக பிற்போடப்படும். | இலங்கை பொதுக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் திறைசேரி அளிப்புகள் நடைமுறை ஆண்டின் வருமானங்களாக இனங்காணுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முந்திய ஆண்டு பொருட்டு மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 1,031,000 பதிவுக் கட்டண வருமானம், முந்திய ஆண்டின் மிகைக்கு சீராக்கப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டில வருமானமொன்றாக இனங்காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக, மீளாய்வாண்டில் மிகையானது ரூபா 1,031,000 ஆல் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | பதிவுக் கட்டணமானது, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்ககளில் குறிப்பிடப்பட்டதைப் போன்றே 2023 ஆம் ஆண்டில் பதிவுக் கட்டணம் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் கணக்காய்வுமூலம் சுட்டிக்காட்டியதன் பிற்பாடு 2024 ஆம் ஆண்டில் வருமான சீராக்கம் செய்துகொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் இனங்கண்டு கணக்கில் பதிதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 48 பிரகாரம், அளிப்புகளாக இனங்காணப்பட்டிருந்த சொத்துக்களின் காலக்கழிவுப் பெறுமதி வருமானமாக காட்டுவதற்குப் பதிலாக நிலையான சொத்துக்களின் தேய்மானத்திற்கு ஈடுசெய்து காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக, மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துகளின் தேய்மான பெறுமதி ரூபா 861,331 ஆன போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 233,303 எனக் காட்டியமையினால் ஆண்டின் தேய்மான பெறுமதி ரூபா 628,028 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டில் சரியாக கணக்குகளில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு இணங்குகின்றோம். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம், அளிப்பு சொத்துக்களின் காலக்கழிவுப் பெறுமதி வருமானமாக காட்டுதல் வேண்டும். |

### 1.5. 3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த போனஸ் செலுத்துதல் மற்றும் எஞ்சிய லீவுகளுக்கான கொடுப்பனவு பொருட்டு திறைசேரியிலிருந்து பெறப்பட்ட அங்கீகாரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த குறைபாட்டினை நிவர்த்தி செய்துகொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் போனஸ் செலுத்துதல் பொருட்டான அங்கீகாரத்தை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இலங்கை பொறியியற் பேரவைச் சட்டம் | | | |
| (i) பிரிவு 12(ஈ) | பொறியியல் வல்லுநர்களின் தொழில் தகாத நடத்தைகளுக்கு ஏற்புடைய சில விடயங்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டிய போதிலும், பொறியியல் தொழிலில் ஈடுபடும் வல்லுநர்களினால் கடைப்பிடிக்கப்பட வேண்டியதென அறிமுகப்படுத்தப்பட்ட தொழில் நெறிமுறைகளின்படி பொறியியலாளர்கள் செயலாற்றுகிறார்களா என்பதுபற்றி இனங்கண்டு சோதிப்பதற்கான நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படவில்லை என்பதுடன் அதுபற்றி விசாரணை எதுவும் நடத்தப்பட்டிருக்கவில்லை. | பொறியியல் வல்லுநர்களின் தொழில் தகாத நடத்தைகளுக்கு ஏற்புடைய நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான சட்டவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது, அதற்கு தேவையான உள்ளக செயன்முறைகள் (Internal Processes) தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை எந்த ஒரு பொறியியல் வல்லுநர் மீதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் முறைப்பாடு எதுவும் கிடைக்காமையினால் விசாரணை நடத்தப்பட வேண்டிய தேவை எழவில்லை எனவும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். | சட்டத்தின் ஏற்பாடுகளின்படி பொறியியலாளர்களின் தொழில் நெறிமுறைகளை கடைப்பிடித்தலை சோதித்தல் வேண்டும். |
| (ii) பிரிவு 14(1) | இலங்கை பொறியியற் நிறுவகம் (IESL) மற்றும் இலங்கை நியதிச்சட்ட பொறியற் நிறுவகம் (IIESL) ஆகிய இரு நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை பொறியியற் பேரவையின் உறுப்பினர்களாக பதிவு செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளமையினால், உறுப்பினர்கள் பொறியியற் பேரவையின் பதிவுக் கட்டணத்தை மேற்படி இரு நிறுவனங்களின் | இலங்கை பொறியியற் பேரவையின் தரவுத்தளத்தில் (database) பெயர்கள் இருக்கின்ற எனினும் பதிவுசெய்துகொள்ளாத, IESL மற்றும் IIESL உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி மூலம் அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், பேரவையின் தரவு முறைமையில் (database) இல்லாத IESL மற்றும் IIESL உறுப்பினர்களுக்கு இந்த நினைவூட்டலை அந்தந்த | இலங்கை பொறியியற் பேரவையில் பதிவுசெய்துகொள்ளாத உறுப்பினர்களை பேரவையில் பதிவுசெய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உறுப்பினர் கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தியிருந்தனர்.<br>அதன்படி, 2023 ஆம் ஆண்டில் மேற்படி இரண்டு நிறுவனங்களிலும் முறையே 19,689 மற்றும் 8,968 என்றவாறு 28,657 பேர் உறுப்புரிமை பெற்றிருந்த போதிலும் அதில் முறையே 5,643 மற்றும் 6,904 என்றவாறு 12,547 பேர் அதாவது 43.78 சதவீதத்தினர் பொறியியற் பேரவையின் பதிவினை பெற்றிருக்கவில்லை.<br>இலங்கை பொறியியற் பேரவையில் பதிவுசெய்துகொள்ளாத உறுப்பினர்கள் பொறியியல் தொழிலில் ஈடுபடுவதில்லை என்பதற்கான உறுதிப்பாடு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிறுவனங்களால் மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>பட்டயப் பொறியாளர்களின் பதிவை உறுதிப்படுத்துவதற்காக பொதுமக்களை விழிப்பூட்டும் விளம்பரங்களை வெளியிடுதல்.<br>அரச நிறுவனங்களில் பணியாற்றும் பொறியியலாளர்களுக்கு பொறியியல் சேவைகள் பணிப்பாளர் ஊடாக சுற்றறிக்கை ஒன்றையும் வெளியிட்டு தகவல்களை சேகரித்தல்.<br>மின்சார சபை, ஸ்ரீ லங்கா டெலிகொம் மற்றும் லங்கா மின்சார தனியார் நிறுவனம் உள்ளிட்ட சில நிறுவனங்களின் பொறியியலாளர்களின் பதிவு விபரங்களை பொறியியற் பேரவைக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1985 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்தச்) சட்டத்தின் 47 ஆம் பிரிவு | பேரவையானது நிதியத்துக்கு உதவுதொகைகளை செலுத்தும்போது ஊதியத்தை கணக்கிடுவதற்காக ஊழியர்களின் பிரயாணக் கொடுப்பனவுகள், எரிபொருள் கொடுப்பனவுகள், தொலைபேசி கொடுப்பனவுகள், தொழில்சார் கொடுப்பனவுகள் மற்றும் விசேட கொடுப்பனவுகள் என்பன கருத்திற் கொள்ளப்பட்டன. இதன் காரணமாக, இது உரிய கொடுப்பனவுகளில் 15 சதவீதம் பேரவையின் உதவுதொகைகளாக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன், ஊழியர்களின் பங்களிப்பு 10 சதவீதம் மேலதிகமாக அறவிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக தொழில் ஆணையாளரின் (ஊ.சே.நி.) கருத்துகள் பெறப்பட்டன. அவரின் கருத்துப்படி, இது சட்டத்திற்கு முரணானது அல்ல என்பதுடன் இதற்கு அவர்களின் அங்கீகாரம் பெற வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. | ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்றவாறு உதவுதொகைகளை அறவிடுதல் மற்றும் செலுத்துதல் மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய (திருத்தச்) சட்டத்தின் 44 ஆம் பிரிவு | பேரவையானது நிதியத்துக்கு உதவுதொகைகளை செலுத்தும்போது ஊதியத்தை கணக்கிடுவதற்காக பிரயாணக் கொடுப்பனவுகள், எரிபொருள் கொடுப்பனவுகள், தொலைபேசி கொடுப்பனவுகள், தொழில்சார் கொடுப்பனவுகள் மற்றும் விசேட கொடுப்பனவுகள் என்பனவற்றை கருத்திற் கொள்ளப்பட்டமையினால் குறித்த கொடுப்பனவுகளில் 3 சதவீதம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக தொழில் ஆணையாளரின் (ஊ.சே.நி.) கருத்துகள் பெறப்பட்டன. அவரின் கருத்துப்படி, இது சட்டத்திற்கு முரணானது அல்ல என்பதுடன் இதற்கு அவர்களின் அங்கீகாரம் பெற வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. | ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்றவாறு உதவுதொகைகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை. | | | |
| | VIII ஆம் அத்தியாயத்தின் 10:1 ஆம் உட்பிரிவு | வீட்டிலிருந்து கடமைகளை நிறைவேற்றும்போது கடமையில் செலவழித்த நேரத்தையும் ஆற்றிய கடமைகளையும் உறுதிப்படுத்த முடியாமையினால், மேலதிக நேரம் அல்லது அதுபோன்ற கொடுப்பனவுகள் செலுத்தப்படக்கூடாத போதிலும், 2023 சனவரி முதல் திசெம்பர் வரை வார இறுதி மற்றும் பொது விடுமுறை 96 நாட்கள் வீட்டிலிருந்து கடமைகளை நிறைவேற்றியமைக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பெண் உத்தியோகத்தருக்கு சம்பளத்தில் 1/20 என்றவாறு மொத்தம் ரூபா 263,240 லீவு நாள் சம்பளமாகவும், ரூபா 47,387 ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பாகவும் | வீட்டிலிருந்து கடமைகளை நிறைவேற்றிய நேரம் மற்றும் நிறைவேற்றிய கடமைகள் தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முறையியல் ஒன்றை தயாரித்து பேரவையின் பணிகளை தொடர்ச்சியாகவும் திறமையாகவும் நிகழ்நிலை முறை ஊடாக லீவு நாட்களில் பதவியினர்மூலம் கடமைகள் செய்வித்துக் கொள்ளப்பட்டன. 2023 சனவரி முதல் திசெம்பர் வரை தகவல் தொழில்நுட்ப பெண் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட லீவு நாள் சம்பளம் தவிசாளரின் மேற்பார்வையின் கீழ், பணியாற்றிய நேரத்தை உறுதிப்படுத்தி, திறம்பட செயலாற்றிய பிற்பாடு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. எங்கள் ஊழியர்களின் செயலாற்றுகையானது அவர்கள் மேற்கொள்கின்ற பணிகளின் அளவுமூலம் | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு ஏற்றவாறு செயலாற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தன. இதற்காக கடந்த ஆண்டில் ரூபா300,310 தொகையும் பெண் உத்தியோகத்தருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | அளவிடப்படுகின்றது. அதனால், அநேகமான வேலைகள் ஊழியர் இருக்கும் இடத்தில் தங்கியிருக்காது தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி. 137 | பேரவையின் கொடுப்பனவு வவுச்சர்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | எமது அறிவுக்கு எட்டியவரையில் நாங்கள் பயன்படுத்தும் வவுச்சர்களில் அனைத்து விவரங்களும் அடங்குகின்றன. இதுபற்றி மேலும் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் கொடுப்பனவு வவுச்சர்களை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) நி.பி.225(1) மற்றும் (2) | கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற வவுச்சர்கள் பரிந்துரைக்கப்பட்ட படிவங்களில் சரியாகவும் முழுமையாகவும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பேரவையின் கொடுப்பனவுகள், சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தப்பட்ட வவுச்சர்கள் முறையே பொது 37, பொது 33 மற்றும் பொது 35(அ) படிவங்களுக்கு புறம்பாக தயாரிக்கப்பட்டிருந்ததுடன், பரிந்துரைக்கப்பட்ட படிவங்களுக்கு புறம்பான கொடுப்பனவு வவுச்சர்களைப் பயன்படுத்துவதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் இருந்து பெறப்பட்ட அங்கீகாரமும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எமது அறிவுக்கு எட்டியவரையில் நாங்கள் பயன்படுத்தும் வவுச்சர்களில் அனைத்து விவரங்களும் அடங்குகின்றன. இதுபற்றி மேலும் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் கொடுப்பனவுகளுக்காக உரிய படிவங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நி.பி. 264 | ரூபா 429,035 ஆன பேரவையின் 55 கொடுப்பனவுகள் பொருட்டு பற்றுச்சீட்டுக்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | உரிய வவுச்சர்களுடன் பற்றுச்சீட்டுக்கள் உள்ளன என்பது எங்கள் நம்பிக்கையாகும். 55 கொடுப்பனவுகளும் இலத்திரனியல் பட்டியல்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளாகும். அவற்றுக்கான கொடுப்பனவுகளுக்கு பிரத்தியேக பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுவதில்லை என்பதுடன் அவை அடுத்த மாத பட்டியலில் செய்யப்பட்ட கொடுப்பனவுகளாக (payment received) காட்டப்பட்டுள்ளன. இதுதொடர்பாக மென்மேலும் தேடிப்பார்த்து எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் கொடுப்பனவுகளுக்காக பற்றுச்சீட்டுக்களை பெறுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்ண்டின் செயல்பாட்டு விளைவு ரூபா 9,319,574 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,885,455 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 2,434,119 வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீண்டுவரும் அளிப்புகள் ரூபா 3,832,405 ஆல் குறைந்து வருமான வரி ரூபா 1,640,594 ஆல் அதிகரித்து இருந்தபோதிலும், நிதிசார் வருமானங்கள் ரூபா 3,799,870 ஆல் அதிகரித்து பிற செயல்பாட்டு செலவுகள் ரூபா 4,105,937 ஆல் குறைந்தமை என்பன இந்த வளர்ச்சிக்கு காரணங்களாக அமைந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 யூலை 09 ஆம் திகதி முதல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி பொருட்டு கனிஷ்ட முகாமைத்துவ மட்ட JM 1-1 சம்பள குறியீட்டின் கீழ் ஆட்சேர்க்கப்பட்டு பின்னர் முகாமைத்துவ மட்ட MM 1-1 சம்பள குறியீட்டின் கீழ் 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் அப்பெண் உத்தியோகத்தர் பிரதான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியை பிரதான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி வரை தரமுயர்த்தி அதனை உள்ளீர்ப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் ஆட்சேர்ப்பு நடைமுறையில் 15 வருட அனுபவம் அத்தியாவசிய விடயமொன்று எனவும், அதன்படி, ஆட்சேர்ப்பு நடைமுறையின் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்திசெய்திருப்பின் அதற்கு |

பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி, தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்திராத நிலையில் HM 1-3 சம்பள குறியீட்டின் கீழ் பிரதான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2022 நவம்பர் 28 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தார். முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் DMS 1850 ஆம் இலக்க மற்றும் 2022 யூன் 27 ஆம் திகதிய கடிதத்தின்மூலம், HM 1-3 சம்பள குறியீட்டின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட முகாமைத்துவ மட்ட பிரதான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி பொருட்டு ஆட்சேர்க்கப்பட வேண்டியது MM 1-1 இன் கீழ் உள்ளவருக்கு பிரத்தியேகமாகுமாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த பிரதான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி வெற்றிடமானதன் பிற்பாடேயாகும் என காட்டப்பட்டிருந்தது. மேலும், தாபனவிதிக் கோவை அத்தியாயம் II இன் உட்பிரிவு 13.5 பிரகாரம், வெற்றிடமான பதவிகள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும் என்றால் மாத்திரமே கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமித்தல் வேண்டும். அதன்படி, HM 1-3 குறியீட்டின் கீழான பதவிகள் பொருட்டு வெற்றிடம் இல்லையெனினும், அதற்காக கடமைகளை நிறைவேற்றுவதற்கு உரிய பெண் உத்தியோகத்தருக்கு நியமனம் வழங்கப்பட்டு, அதற்காக மீளாய்வாண்டின் யூன் மாதம் வரை கடமைகளுக்கான கொடுப்பனவுகள், ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு என முறையே ரூபா 67,380, ரூபா 10,107 மற்றும் ரூபா 2,021 என்றவகையில் ரூபா 79,508 செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக முந்திய ஆண்டிலும் ரூபா 461,598 செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு, தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.6 ஆம் பிரிவு பிரகாரம் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

வரைவினை திருத்தி அனுப்புமாறு அறிவிக்கப்பட்டது. பிரதான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி HM 1-3 சம்பள குறியீட்டிக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், தற்போது அதில் சேவையாற்றுவது MM 1-1 சம்பள குறியீட்டைச் சேர்ந்த ஓர் உத்தியோகத்தர் ஆகும். அப்பெண் உத்தியோகத்தர் தேவையான அனைத்து கல்வித் தகைமைகள் மற்றும் இதற்கு மேலதிகமாக தொழில்சார் தகைமைகளை (Professional Qualifications) பூர்த்திசெய்திருந்த போதிலும், தேவையான 15 வருட அனுபவத்தை பூர்த்திசெய்யாமையினால் இது தொடர்பில் 2022 செப்தெம்பர் 06 ஆம் திகதியன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் உடன்பட்டவாறு, இலங்கை பொறியியற் பேரவைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க தற்போது பணிபுரியும் பிரதான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13:5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு HM 1-3 சம்பள குறியீட்டிற்கு ஏற்புடைய பதில்வேலை "கடமைகளை நிறைவேற்றல்" ஆக நியமிப்பதற்கு பேரவையினால் தீர்மானிக்கப்பட்டது. அதற்குரிய ஊதியம் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12:3, 12:5:1 ஆகிய பிரிவுகளின்படி கணக்கிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்ததுடன், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் IX ஆம் அத்தியாயத்தின் 119ஆம்

நியமித்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | பிரிவின்படி HM 1-3 பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான உத்தியோகபூர்வமாக உரித்துடைய கொடுப்பனவுகள், அவற்றுக்குரிய ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு என்பன செலுத்தப்பட்டன. 2024 மே 17 ஆம் திகதிய நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தற்போதைய பிரதான தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் இலங்கை பொறியியற் பேரவையின் HM 1-3 சம்பள குறியீட்டின் பதில் (தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13:5 ஆம் பிரிவின்படி “கடமைகளை நிறைவேற்றல்” எனும் வகுதியின் கீழ்) நியமிக்கப்பட்டார். **HM 1-3** சம்பள குறியீட்டிக்குத் தேவையான அனுபவமான 15 வருடங்கள் பூர்த்திசெய்யும் வரை தொடர்ந்தும் சேவையைப் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | |
| (ஆ) | இலங்கை பொறியியற் பேரவை பொருட்டான பதவியினர்களை அங்கீகரித்துக்கொள்ளல் எனும் தலைப்பின் கீழ் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் 02/02/ADM/12/ENG.COUNCIL/03 ஆம் இலக்க 2019 நவம்பர் 18 ஆம் திகதிய கடிதம் மூலம் பொறியியற் பேரவை பொருட்டான பகுதி நேர அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் பதவிக்கு, இலங்கை கணக்காளர் சேவையின் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை இணைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக காட்டப்பட்ட போதிலும், பேரவையின் கணக்கு நடவடிக்கைகாக கணக்காளர் சேவையில் அல்லாத உத்தியோகத்தர் இணைக்கப்பட்டு ரூபா 18,600 வீதம் மாதாந்த கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | பகுதி நேர அடிப்படையில் இலங்கை கணக்காளர் சேவையிலுள்ள கணக்காளர் ஒருவரை தேடிக்கொள்வதற்கு முயற்சித்த போதிலும், அதில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டமையினால், தகைமையும் அனுபவமும் உள்ள கணக்காளர் ஒருவரின் சேவை ரூபா 18,600/= வீதம் மாதாந்த கொடுப்பனவு செலுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும், இலங்கை கணக்காளர் சேவையில் பணிபுரியும் கணக்காளர் ஒருவரைக் தேடிக்கொள்வதற்கு தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றோம் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். | தகைமையுள்ள கணக்காளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் எஞ்சிய லீவுகள் பொருட்டு இரண்டு உத்தியோகத்தர்களுக்கு செலுத்துவதற்காக 2023 நிதிக் கூற்றுக்களில் ரூபா 84,135 தொகை அட்டுறுவாக இருந்தது. இந்தக் கொடுப்பனவுகள் PDF 8/2022 ஆம் இலக்க 2022 திசெம்பர் 21 ஆம் திகதிய பொது தொழில்முயற்சி சுற்றறிக்கை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதுடன், சுற்றறிக்கையின் iii பந்தியில் குறிப்பிடப்பட்ட “கொடுப்பனவுக்கான கருத்திலெடுக்கும் ஆண்டுக்கு முன்னர் ஏற்புடையதாக பொது திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பங்கிலாபம்/ வருமானவரி செலுத்தியிருக்க வேண்டும்.” நிபந்தனையை பூர்த்தி செய்யாதபோது கொடுப்பனவுக்காக நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. | இலங்கை பொறியியற் பேரவை உரிய ஆண்டிற்கு செலுத்த வேண்டிய 30 சதவீத வருமான வரி செலுத்துதலின் அடிப்படையில் இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும், இங்கு தவறு இருப்பின், அதற்குரிய அங்கீகாரம் அல்லது பங்கிலாபம் செலுத்தியமை தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கைளை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக தயவுடன் அறிவிக்கிறோம். | பொது தொழில்முயற்சி சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு ஏற்ப செயலாற்றுதல் வேண்டும். |
| (ஈ) | தொழில் ஆணையாளரின் EPF/FROT/22 ஆம் இலக்க 2023 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய கடிதம்மூலம், இலங்கை பொறியியற் பேரவையின் ECSL / EPF /2023 /02 ஆம் இலக்க 2023 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய கடிதம்மூலம் கோரப்பட்டுள்ள “ஓ” குறிப்பிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதிய இல. 1, 3 மற்றும் 4 உரித்துடைய ஊழியர்களுக்கு மட்டும் 1958ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் கீழ், 2022 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும்வகையில் தொழில்கொள்வோர் பங்களிப்புத் தொகை 12சதவீதத்திலிருந்து 15சதவீதம் வரையிலும், ஊழியர் பங்களிப்புத் தொகை 8சதவீதத்திலிருந்து 10சதவீதம் வரையிலும் அதிகரிப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், ஊழியர் சேமலாப நிதிய இல. 5, 6 மற்றும் 7 உரித்துடைய ஊழியர்களுக்கும் மேற்குறிப்பிட்டவாறு கணக்கிடப்பட்டு ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புத் தொகை ஊடாக சேமலாப நிதியமாக ரூபா 40,896 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இந்த விடயமானது 2022 கணக்காய்வு அறிக்கைமூலமே தெரியவந்தது. அந்த கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 ஆம் திகதியே எமக்கு கிடைத்தது. பின்னர் இதுதொடர்பில் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் 2023 ஆகஸ்ட் 08 ஆம் திகதி “ஓ” படிவத்தை நிரப்பி அனுப்ப வேண்டும் என ஊழியர் சேமலாப நிதியத்தினால் எமக்கு அறிவிக்கப்பட்டது. தற்போது, ஊழியர் சேமலாப நிதிய இலக்கம் 5 மற்றும் 6 இன் ஊழியர்கள் இலங்கை பொறியியற் பேரவையில் பணியாற்றவில்லை. அதனால், அவர்களிடம் அங்கீகாரமும் கோரப்படவில்லை. ஊழியர் சேமலாப நிதிய இல.7 உரித்துடைய ஊழியருக்கு “ஓ” படிவத்தை பூர்த்திசெய்து தேவையான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தயவுடன் அறியத்தருகிறோம். | ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க ஒவ்வொரு ஊழியருக்கும் சமமான விதத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |